முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (103) பொருளியல்

(Economics)

26-09-2020
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

பக்கங்களின் எண்ணிக்கை : 06
வினாக்களின் எண்ணிக்கை : 06

(1) ***நேரம்:*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் காணப்படுவதற்கான காரணம்,

(1) வருமான அதிகரிப்புடன் நுகர்வு அதிகரிப்பது

(2) பொருளாதார வளங்கள் மாற்றப்பட முடியாதவைகளாக இருப்பது

(3) பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் படாமல் இருப்பது

(4) சகல விருப்பங்களையும் நிறைவுசெய்ய வளங்கள் போதுமானதாக இல்லாதிருப்பது

**1.2** பின்வருவனவற்றுள் தொழில் முயற்சியாண்மைக்கான ஒரு வெகுமதியாக (reward for entrepreneurship) அமைவது எது?

(1) கூலிகள் (2) வட்டி (3) இலாபம் (4) வாடகை

**1.3** பின்வருவனவற்றுள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மூலதனச் செலவினம் ஒன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் (2) மீண்டுவரும் (recurrent) மாற்றல்கள்

(3) உண்மையான சொத்துக்களின் கொள்வனவு (4) மானியங்களின் ஏற்பாடு

**1.4** பின்வருவனவற்றுள் உற்பத்திச் சாத்திய வளையியின் ஓர் எடுகோளாக (assumption) அமைவது எது?

(1) தொழினுட்பவியலில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

(2) இரண்டு பொருட்கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

(3) கிடைக்கக்கூடிய சகல வளங்களும் நிலையானவை அல்ல.

(4) வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

**1.5** பின்வருவனவற்றுள் நிறை போட்டியின் ஒரு பண்பாக (characteristics) **அமையாதது** எது?

(1) ஓரினப் பொருட்களின் உற்பத்தி

(2) தடையற்ற பிரவேசமும் வெளியேறுகையும்

(3) விற்பனையாளர் மாத்திரமே பொருளின் விலையைத் தீர்மானித்தல்

(4) சந்தையில் பெரிய அளவிலான வாங்குநர்களும் விற்பனையாளர்களும் காணப்படுதல்

**1.6** உங்களுக்கு நிறுவனமொன்றின் ஒரு மாதத்திற்கான பின்வரும் கிரயத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | **ரூபா** |
|---|---|
| நேர் கிரயங்கள் | 180,000 |
| நேரில் கிரயங்கள் | 45,000 |

நிறுவனமானது மாத்தின்போது 2,500 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ததுடன் அலகொன்றிற்கான விற்பனை விலை ரூபா 100/- ஆகும்.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், மாதத்திற்கான பொருளாதார இலாபமாக (economic profit) அமைவது :

(1) ரூபா 70,000/-. (2) ரூபா 25,000/-. (3) ரூபா 205,000/-. (4) ரூபா 225,000/-.

**1.7** ஒரு நாடு மற்றைய நாடுகளை விட ஒரு பொருளை அல்லது சேவையை அதே கிரயத்தில் அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடியதாக அல்லது குறைந்த கிரயத்தில் அதே அளவினை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்குமாயின் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) முழு நயம் (2) வர்த்தக நிலுவை

(3) ஒப்பீட்டு நயம் (4) பாதுகாப்புவாதம்

**1.8** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியினது நாணயக் கொள்கையின் ஒரு தரரீதியான கருவியாக (qualitative instrument) இருப்பது எது?

(1) வங்கி வீதம்

(2) பகிரங்க சந்தைத் தொழிற்பாடுகள்

(3) ஒதுக்க வீதம்

(4) கடன்களுக்கான ஒரு உயர்ந்தபட்ச முதிர்வுக் காலப்பகுதியை அமைத்தல்

**1.9** குறுகிய பண நிரம்பலின் தொகை, வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் ஆகியன எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) திரட்டிய விரிந்த பண நிரம்பல் (2) விரிந்த பண நிரம்பல்

(3) விரிந்த பணப் பெருக்கி (4) மிகவும் விரிந்த பண நிரம்பல்

**1.10** பின்வருவனவற்றுள் சென்மதி நிலுவைக் கணக்கின் நடைமுறைக் கணக்கினுள் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) வெளிநாட்டு நேரடி முதலீடு

(2) பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி

(3) பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி

(4) முதன்மை வருமானம்

*இல. **1.11** தொடக்கம் **1.12** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ..................... (*சராசரிக் கிரயம் / எல்லைக் கிரயம்*) என்பது தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு அலகு வெளியீட்டிற்கான கிரயத்தைக் குறிக்கிறது.

**1.12** உள்ளீடுகளின் விகிதாசார அதிகரிப்பைவிட வெளியீட்டின் விகிதாசார அதிகரிப்பு ..................... (*உயர்வாக / தாழ்வாக*) இருக்கும்போது அளவுத்திட்ட விளைவு அதிகரிக்கும்.

*கீழே **1.13** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் (சரியானது / தவறானது) குறிப்பிடுக.*

**1.13** சந்தைச் சமநிலையில் ஒரு மிகையான கேள்வி (excess demand) காணப்படுகிறது.

**1.14** எல்லைப் பயன் (marginal utility) என்பது தரப்பட்டதொரு காலப்பகுதியில் பொருளின் மேலதிக அலகொன்றை நுகர்வதன் மூலம் ஒரு நபர் அடைகின்ற மேலதிக திருப்தி ஆகும்.

**1.15** கேள்வி விதியின்படி (law of demand) பொருள் ஒன்றின் விலைக்கும் கேள்விக் கணியத்திற்கும் இடையில் ஒரு நேர்த் தொடர்பு (positive relationship) காணப்படுகிறது.

***1.16*** *தொடக்கம்* ***1.20*** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**1.17** குறைந்துசெல்லும் எல்லை விளைவு விதி என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** தனியுரிமையின் (monopoly) இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.19** தேசிய வருமானக் கணக்குகளின் இரண்டு (02) வரையறைகளைக் (limitations) குறிப்பிடுக.

**1.20** இரண்டு (02) பேரினப் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் தந்து பொருளாதாரப் பொருட்களை பொருளாதாரமற்ற பொருட்களிலிருந்து **வேறுபடுத்துக.** (03 புள்ளிகள்)

(b) திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமையின் நான்கு (04) பண்புகளை (characteristics) **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(c) பொருளியலில் சந்தர்ப்பச் செலவு எண்ணக்கருவை உதாரணமொன்றுடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) **பொருள் A** யிற்கான கேள்வி (Qd) மற்றும் நிரம்பல் (Qs) சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன :

$$Qd = 180 - 4p$$

$$Qs = -20 + 6p$$

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

(i) சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) நுகர்வோர் மிகையைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற இரண்டு (02) காரணிகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(c) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்யும் இரண்டு (02) வழிகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) (i) பணத்தின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) இலத்திரனியல் பணத்தைப் (electronic money) பயன்படுத்துவதற்கான இரண்டு (02) காரணங்களை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) இலங்கை மத்திய வங்கியின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) பணத்திற்கான கேள்விக்கான இரண்டு (02) நோக்கங்களை (motives) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) நிறைபோட்டிமிக்க நிறுவனங்கள் குறுங்கால ஓட்டத்தில் எவ்வாறு இலாபத்தை உச்சப்படுத்துகின்றன என்பதை வரைபொன்றைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) COVID-19 சர்வதேச நோய்ப் பரவல் காரணமாக இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படும் பின்விளைவுகள் (consequences) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) (a) சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்கள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நிலையான பரிமாற்று வீதத்திற்கும் நெகிழ்ச்சியான (மிதக்கும்) பரிமாற்று வீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) தேசிய வருமானக் கணக்குகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் மூன்று (03) காரணங்களை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(C) பொருளாதாரமொன்றின் ஒரு வருட காலப்பகுதிக்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 2,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 1,500 |
| மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | 1,200 |
| ஏற்றுமதிகள் | 1,800 |
| இறக்குமதிகள் | 1,250 |
| வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானம் (நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம்) | – 800 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

செலவின அணுகுமுறையைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில் (04 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |